IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.320/2018
DEPOSITION OF WITNESS (PW1)

<u>வா.சா. 1 சாட்சி கணேசமூர்த்தி த.பெ.நாகராஜன்</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 04.11.2024 in accordance with the provisions of Act XX141.**

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. நான் 12ம்வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்குச் சொத்து எனது மனைவி பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்து யாரிடமிருந்து வாங்கப்பட்டது என்றால் நாகம்மாள் என்பவரிடம் இருந்து 2008ம் ஆண்டு 1238ச.அடி வாங்கப்பட்டது. எனது மனைவி பெயரில் உள்ளதாக கூறும் பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், பட்டாவிற்கு விண்ணப்பித்துள்ளேன்.

2. நாகம்மாள் வழக்குச் சொத்தை யாரிடம் கிரையம் எவ்வளவு விஸ்தீரணம் வாங்கினார் என்றால் தெரியாது. நாகம்மாள் 1986ல் வாங்கிய கிரையபத்திரத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். 2008ல் நாகம்மாளிடம் நான் எத்தனை இலக்கச் சொத்துக்கள் வாங்கினேன் என்றால் இரண்டு இலக்கச் சொத்துக்கள் வீடு மற்றும் காலியிடமாக வாங்கியுள்ளேன்.

3. வீடும், காலியிடமும் தனித்தனி சொத்துக்களாக வாங்கினேனா என்றால் ஒரே சொத்தாகத்தான் வாங்கினேன். மேற்படி சொத்து விபரத்தின் கிழமேல் ஜாதியடி வடபுறம் மற்றும் தென்புறம் 24 3/4 அடி, தென்வடல் ஜாதியடி கிழக்கு மற்றும் மேற்கில் 50 அடி என்றால் சரிதான்.

அவ்வாறுதான் பிராதில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். தென்வடல் ஜாதியடி கிழக்கு மற்றும் மேற்கில் 50 அடிக்கு மேல் எனக்கு இடம் இல்லை என்றால் சரிதான்.

4. 2வது இலக்கச் சொத்தில் தென்வடல் கீழ்புறம் மற்றும் மேல்புறம் 2அடிக்கு மட்டும் நான்குமால் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 2அடிக்கு மட்டும்தான் பிரதிவாதி கட்டிடம் கட்டியுள்ளதால்தான் அவ்வாறு கூறியுள்ளேன். எனக்கு மொத்தம் தென்வடல் கீழ்புறம் மற்றும் மேல்புறம் 50 அடி மட்டும்தான் உள்ளது என்றாலும், நான் கூடுதலாக 2அடி இருப்பதாக வழக்கு தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. 1வது இலக்கச் சொத்தில் மேற்கே பாக்கியம் வீடு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 1வது இலக்கச் சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று பிராதிலோ, சொத்து விபரத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நான் குறிப்பிடவில்லையென்றாலும் வழக்கிற்காக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. நான் 2008ல் கிரையம் வாங்குவதற்கு முன்பாகவே பிரதிவாதி வீடு இருந்தது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய வா.சா.ஆ.5 ஆவணத்தில் தெற்கே பாக்கியம் வீடு என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, காலியிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு குறிப்பிடவில்லையென்றாலும் வழக்கிற்காக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.9 புகைப்படத்தில் 5வது புகைப்படத்தில் உள்ள ஜவரிகலரில் உள்ள வீடு யாருடையது என்றால் பிரதிவாதியுடையது.

7. 1996ல் பிரதிவாதி வீடு கட்டும்போது 2அடி விட்டு கட்டினார் என்றும், அந்த 2அடியில்தான் தண்ணீர்பைப் பதித்துள்ளார் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.9 புகைப்படங்களில் 5வது புகைப்படத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடம் உள்ள இடம் மட்டும்தான் எனக்கு பாத்தியப்பட்ட இடம் என்றாலும், அதன் அடுத்துள்ள சந்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல.

8. என்னுடைய பத்திரப்படி 50 அடி மட்டுமே பாத்தியம் என்றும், அதனை மறைத்து நான் 52 அடி என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி 1996ல் வீடு கட்டி அவர் அனுபவித்து வந்தார் என்றும், நான் 2008ல் வாங்கி 2வது இலக்கச் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று தவறுதலாக வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

9. 2012ல் பிரதிவாதி மாடிவீடு கட்டும்போதும் 2வது இலக்கச் சொத்தை பொறுத்து நான் எவ்வித ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.